/பதிவுத்துறை/

**அனுப்புநர்**

திரு.ம.ப.சிவன் அருள், இ.ஆ.ப.,
பதிவுத்துறை தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை – 28.

**பெறுநர்**

அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்
(நிர்வாகம்)

**ந.க.எண்.19919/ஐ1/2020 நாள்.05.07.2021**

ஐயா/அம்மையீர்,

**பொருள்:** சங்கப் பதிவுச் சட்டம் 1975 – இரண்டாம் அலை COVD 19 பெருந்தொற்று காரணமாக வருடாந்திர கூட்டங்கள் கூட்ட இயாலாமை – இணைய வழி கூட்டம் நடத்திட அனுமதி கோரியது – தொடர்பாக.

**பார்வை:** 1.அரசாணை எண்.96 வணிகவரி மற்றும் பதிவுத்துறை நாள்.30.6.2021.
2.அரசுக் கடித எண்.5110/எம்1/2021-1 நாள்.30.06.2021.

*****

தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் பிரிவு 26-ன்படி ஆண்டு தோறும் சங்கப் பொதுக்குழு கூட்டம் கூட்டப்படவேண்டும். கொரோனா பெருந்தொற்று முதல் அலையின் போது 2019-2020 நிதியாண்டிற்கு சங்கங்களின் பொதுக்குழு கூட்டங்கள் இணையவழி நடத்திட அனுமதி வழங்கப்பட்டது போல் இரண்டாம் அலை கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020-2021 நிதியாண்டிற்கும் பொதுக்குழு கூட்டங்கள் இணையவழி நடத்திட அனுமதி கோரப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக பார்வை 2-ல் காணும் அரசுக் கடித்தில் இணைய வழி சங்கப் பொதுக்குழு கூட்டம் நடத்திட அனுமதிக்கலாம் என

Verified @ RealEstate™

தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இணைய வழி சங்க கூட்டம் நடத்துவது தொடர்பாக கீழ்காணும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன.

1. இணைய வழி கூட்டம் நடத்தப்படும் நிகழ்வில் கூட்டத்தின் நிகழ்வு முழுவதையும் வீடியோ பதிவு செய்து (unedited) திருத்தம் செய்யப்படாத இரண்டு குறுந்தகடுகளில் சேமிக்கப்பட்டு சங்கப்பதிவாளருக்கு கோர்வைக்கு தாக்கல் செய்யப்படும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். கூட்ட நிகழ்வு முழுமையாக திருத்தம் செய்யப்டாத ஒளி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டுகுறந்தகட்டில் சேமித்து வழங்கப்பட வேண்டும். (unedited Video and Audio recording of the whole proceedings should be recorded/produced in DVD)

2. ஆள் மாறாட்டம் ஏதும் நடைபெறாத வண்ணம் தகுந்த சரிபார்ப்பு / பாதுகாப்பு நடவடிக்கைகள் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட வேண்டும். பொதுக்குழு மற்றும் தேர்தல் நடத்தும் போது சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் LOGIN ID, PASSWORD, LINK அளிப்பது சங்க நிர்வாகிகளின் கடமையாகும். தவறும் பட்சத்தில், இதனால் ஏற்படும் புகார்களுக்கு சங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

3. இவ்வாறான இணையதள வழி கூட்டம் நடத்துவதற்கான அனுமதியானது தற்போது நிலவும் கோவிட் - 19 பெருந்தொற்று பரவலை தடுக்கும் நோக்கில் வழங்கப்படுகிறது. இந்த அனுமதி 2020-2021 நிதியாண்டுக்கு நடத்தப்படும் பொதுக்குழு கூட்டத்திற்கு மட்டுமே பொருந்தும்.

ஒம்/-05.07.2021
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணையின்படி/

நேர்முக உதவியாளர்(சீட்டு)
05/07/21

நகல்
1. அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள்.
2. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம், சென்னை.

Verified RealEstate